SOND

இணைவோம். செயற்படுவோம். புதிய சமூகத்தினை உருவாக்குவோம்.

T.P:- 077-3314262 E-Mail:-senthu@eureka.lk web:-www.sond.lk

# மாதாந்த அறிக்கை

புரட்டாதி, 2013

**Social Organizations Networking for Development**

RKM Road
Akkaraipattu

No. 19, Saravana Road
Kallady Batticaloa

60 Arasady Road
Jaffna.

18/3A Anai Road
Kaneshapuram
0772242401

## இதழின் உள்ளே

1. யாழ்
2. மட்டக்களப்பு
3. அம்பாறை ஆகிய மூன்று மாவட்டங்களினுடைய செயற்பாடுகள்

"We all will Create a Better World"

SOND

# யாழ் மாவட்டத்தின் செயற்பாடுகள்

## மிதிவெடி அபாயக்கல்வி

இம்மாதத்தில் மிதிவெடி அபாயக்கல்வி செயற்பாட்டின் கீழ் பாடசாலை மாணவர்களுக்ககு தொப்பி வழங்கப்படுவததையும் தெல்லிப்பளை நகுலேஸ்வரா பாடசாலை மாணவர்கள் தொப்பியினை பெற்றுக்கொள்வதையும் படத்தில் காணலாம்

## விழிப்புணர்வு

மீள்குடியேற்றம் செய்யப்பட்ட கிராமங்களில் மக்களுக்கு மிதிவெடி அபயாக்கல்வி விழிப்புணர்வினை பணியாளர்கள் பதாதைகள் மூலம் செயற்படுத்தும் காட்சி







## மிதிவெடி அபாயக்கல்வி கண்காட்சி

நல்லூர் கோவில் வருடாந்த உற்சவகாலத்தினை முன்னிட்டு SOND சர்வோதைய நிறுவனம் இணைந்து Unicef நிதி அனுசரனையுடன் நடாத்தப்பட்ட மிதிவெடி அபாயக்கல்வியினை கண்காட்சிப்படுத்தி வந்தனர். இதில் ஆயிரத்திற்கும் மேற்பட்டோர் திருவிழாக்காண வந்திருந்தனர் அதனை பார்வையிட்டு தாம் மிதிவெடி மற்றும் வெடிக்காத வெடிபொருளில் இருந்து தவிர்ப்பதை ஆர்வத்துடன் கேட்டறிந்து கொள்ளும் மக்கள்.







## மாதிரி விவசாயப் பண்ணை

IED திட்டத்தின் கீழ் மாதிரிப்பண்ணை எமது அமைப்பினால் நடைமுறைப்படுத்தப்பட்டுள்ளது. பயிர்செய்கை செய்யவிருக்கும் மாதிரி கிராமத்தில் மண் பதப்படுத்தப்பட்டு பயிர்கள் நடுவதற்கான ஏற்பாடுகள் நடை பெற்றுக் கொண்டிருக்கின்றது.









# மட்டக்களப்பு மாவட்டத்தின் செயற்பாடுகள்

## கிராமத்திற்றக்கான இடர் வரைபடம் வரைதல்

பண்டாரியாவெளி கிராமத்திற்றக்கான இடர் வரைபடம் வரைதல் 2013.09.04 பண்டாரியாவெளி பல்தேவைக்கட்டிடத்தில் இடம் பெற்றது இதில் கிராமட்ட அனர்த்த முகாமைத்துவ குழு உறுப்பினர்கள் பங்குபற்றியுள்ளார்கள் கிராமத்திற்கான இடர் வரைபடம் வரையும் நிகழ்வானது கிராமசேவகரின் ஆரம்ப உரையுடன் ஆரம்பமாகியது. கிராமமட்ட அனர்த்த முகாமைத்துவ குழுவினர் 2 குழுக்களாக பிரிக்கப்பட்டு இயற்கையில் கிடைக்கும் பொருட்களைக் கொண்டு கிராமத்தின் வரைபடத்தினை தயாரித்திருந்தனர். தொடர்ந்து இரண்டு குழுக்களும் தங்களது படங்களை Flip chart இல் வரைந்து படத்தினை நிறைவு செய்திருந்தனர் . 5 மணிவரை .இடம்பெற்ற இந்நிகழ்வில் மக்கள் பங்களிப்பு திருப்திகரமாக அமைந்ததுடன் வெள்ளப்பாதிப்புக்குள்ளாகும் இக்கிராமத்தின் ஒட்டுமொத்த வளங்கள் மற்றும் இடர் அபாயங்களுக்கான வாய்ப்புக்களும் இனம்காணப்பட்டது முக்கிய அம்சமாகும்.





## அனர்த்த விழிப்புணர்வு கருத்தரங்கு

பிரதேசத்தில் அனாத்த முன்னாயத்த வேலைத்திட்டம் தொடர்பான விளிப்புணர்வு கருத்தருங்கு 2013.09.03 அன்று SOND நிறுவன திட்ட உத்தியோகஸ்தர் தலைமையில் காலை 11.30 மணியளவில் ஆரம்பமானது.இக்கருத்தரங்கிற்கு பிரதேச கிராம சேவை உத்தியோகஸ்தர்,சமூர்த்தி உத்தியோகஸ்தா மற்றும் பொருளாதார அபிவிருத்தி அமைச்சின் பட்டாதாரி பயிலுனர்கள் என 45 பேர் கரந்துகொண்டனர் பிரதேச செயலாளர் அவர்கள் தலைமையுரியினைத் தொடர்ந்து வளதாரி அவர்கள் தொடர்ந்து கருத்தரங்கினை வழிநடத்தியிருந்தார். குறிப்பாக அனர்த்தம் மற்றும் இடர் தொடர்பிலான தெளிவுபடுத்தல்இடம்பெற்றது.





“We all will Create a Better World”

SOND


# அம்பாறை மாவட்டத்தின் செயற்பாடுகள்

## பணியாளர் கலந்துரையாடல்

SOND அமைப்பினுடைய செயற்பாடுகள் தொடர்பான கலந்துரையாடல் 2013.09.15 ம் திகதி நிறைவேற்றுப் பணிப்பாளர் ச. செந்துாராசா தலைமையில் மட்டக்களப்பு SOND அலுவலகத்தில் நடை பெற்றுள்ளது. இதில் மட்டக்களப்பு, அக்கரைப்பற்று SOND அலுவலகப் பணியாளர்கள் 08 பேர் கலந்து கொண்டுள்ளார்கள்.

## இளையோர்களுக்கான கலந்துரையாடல்

இளையோர்களினால் 2013.05.05.06ம் திகதி வடிவமைக்கப்பட்ட சமூக செயற்திட்டங்களின் நிலமையினை அதவது நடை பெற்ற, நடை பெறாத செயற்பாடுகளை அறியும் பொருட்டு 2013.09.10 ம் திகதி அக்கரைப்பற்று சொண்ட் அலுவலகத்தில் பணியாளர் நிஷாந்தியினால் நடாத்தப்பட்டது. இதில் 12 இளையோர் கலந்து அவர்களுடையபிரதேசத்தில் செய்யப்பட்ட செயற்பாடுகள் பற்றிக் குறிப்பிட்டுள்ளார்கள்



## எதிர்காலத்தில் சிறந்த சூழலை உருவாக்கிக்கொள்வதற்கு உகந்த சமூகத்தினை கட்டியெழுப்புதல் .

ஆலையடிவேம்பு பிரதேச செயலாளர் பிரிவில் கண்ணகிபுரம் கிராமத்தில் செயற்பட்டுவரும் கண்ணகி மேட்டுநிலப் பயிர்ச்செய்கையாளர் சங்கத்தினுாடாக SOND அமைப்பினால் மேற்கொள்ளப்பட்டுவரும் சேதன விவசாயப் பண்ணை அமைத்தல் திட்டத்தின் கீழ் சங்கத்தின் உறுப்பினர்களின் மூலம் சேதனப் பசளை தயாரிக்கப்பட்டுள்ளது





# நிதியின்றிய செயற்திட்டம்

அரச சார்பற்ற நிறுவன மென்றால் அது நிதியோடுதான் செயற்படும் என்ற மாயை கற்றவரிடையே கூட உள்ளது. இக் கருத்தினை மாற்றி நிதியின்றி சிலரின் நேரத்தையும் எமது வளத்தையும் பயன்படுத்திச் செய்யப்படும் கீழ்வரும் செயற்திட்டங்கள் இவற்றிற்கு நல் உதாரணங்களாகும்.

சிறுவர் திட்டம்

சிறுவர் மேம்பாட்டினை மையமாகக் கொண்ட இச் செயற்பாட்டில் ஆலையடிவேம்பு, அக்கரைப்பற்று பிரதேச செயலாளர் பிரிவிற்குட்பட்ட தமிழ் , முஸ்லீம், சிங்கள இனத்தினைச் சேர்ந்த 11 ஆண், 24 பெண் உள்ளடங்கலாக 35 சிறுவர்கள் இச் செயற்பாட்டில் இணைந்துள்ளார்கள்.

கலந்துரையாடல்கள்.

காந்தி கழக சிறுவர்களுக்கு ஒவ்வொரு ஞாயிற்றுக்கிழமைகளிலும் காலை 11.00 மணிக்கு பணியாளரான தி.ஜெனிதா அவர்களினால் SOND பயிற்சி மண்டபத்தில் நடாத்தப்பட்ட கலந்துரையாடலில் 53 பேர் கலந்து கொண்டுள்ளார்கள்.





## சிறுவர்களினால் மேற்கொள்ளப்பட்ட விசேட செயற்பாடுகள்.

1. ஓய்வு நேரங்களை பயனுள்ள வழியில் கழிப்பதற்காக சிறுவர்கள் எமது அமைப்பிற்கு வருகை தந்து பழைய கடதாசிகளைப் பயன்படுத்தி 224- குளுசைப் பைகள் தயாரித்து வழங்கினார்கள்.

2. இம் மாதம் சிறுவர்களினால் 03 நடமாடும் நூலக சேவை வாச்சிக்குடா,கோளாவில்,அக்கரைப்பற்று7பிரிவு, ஆலையடிவேம்பு ஆகிய இடங்களில் மேற்கொள்ளப்பட்டது.

## SOND அமைப்பினால் மேற்கொள்ளப்பட்ட விசேட செயற்பாடுகள்.

01. சிறுவர்களின் ஒய்வு நேரங்களை பயனுள்ள வழியில் கழிக்கும் வகையில் வாராந்த கலந்துரையாடலின் முடிவின் போது சிறுவர்கள் விளையாடுவதற்காக கரன்வோட்,புட்வோல்,கிரிக்கெட் வெட் ஆகிய மூன்று வகையான விளையாட்டுப்பொருள் 06 தடவைகள் வழங்கப்பட்டது.

02. சிறுவர்களுடைய கணனிப் பாவனையை அதிகரிக்கும் நோக்கத்தில் எமது அமைப்பில் கணனி செயல்முறை வகுப்புக்கள் நடைமுறைப்படுத்தப்பட்டுவருகின்றது. இதனடிப்படையில் இம் மாதம் 12 பெண்,15 ஆண் உள்ளடங்க 27 சிறுவர்கள் 19 தடவைகள் கணனியைப் பயன்படுத்தியுள்ளார்கள்.

## வளநிலைய பயன்பாடு

சமூகத்தில் வாசிப்புத் திறனை அதிகரிக்கும் பொருட்டு எமது அமைப்பில் மக்களுக்கான நூலக சேவை செய்யப்பட்டு வருகின்றது. இதனடிப்படையில் இம்மாதம் சிறுவர், இளையோர், நிறுவனப் பணியாளர்கள், SOND பணியாளர்கள்,அரசாங்க ஊழியர்கள் ஆகியோர் இம்மாதம் 16 தலைப்பில் 356 புத்தகங்களை பயன்படுத்தியுள்ளார்கள்.

SOND



## தொலைநோக்கு

“புதிய சமூகம் உருவாக்குவோம்”

## பணிநோக்கு

சமூகத்தில் உள்ள சகல தரப்பினரையும் நிறுவனங்களுக்கும் உதவி வழிகாட்டி சமூக மாற்றத்தின் வேலைத்திட்டங்களில் வலுவூட்டிப் பங்காளிகளாக்கி சமூக மாற்றச் செயற்பாடுகளில் பங்கு கொள்ளவைத்தல்.